329

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

28 NOV 1943
329
JL
ஊ211, N11PP
N43.34'5,6.
189982

Venkatachalam S. 1941-43.

Editor … A. Lourduswami, B.A., L.T.
Publi… …aining School, Trichinopoly.

…ம்பர், டிசம்பர் 1943 மலர் 5, 6

…முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனு விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	81
2.	சென்னை கல்வி இலாகா	84
3.	விடுகவிகள்	84
4.	யாப்பியல்	85
5.	விடுகவி விடைகள்	85
6.	மொழிப்பயிற்சி	86
7.	பாடக் குறிப்பு	89
8.	அவரை-ஆமணக்கு தர்க்கம்	90
9.	சிறு கதை	93
10.	கிராமப் பாடசாலையும் சுயநோக்க முயற்சியும் ...	96
11.	பெற்றோர் சங்கங்கள்	97
12.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	98
13.	சங்கீதம்	100
14.	விவசாயப் பழமொழிகள்	100

Rates of Advertisement

PERIOD	HALF PAGE Rs.	As.	Ps.	FULL PAGE Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 34] 15 நவம்பர்–டிசம்பர் 1943 [மலர் 5, 6

189982

பத்திராதிபர் குறிப்புகள்

நம் "பூங்கொத்து" இம்மாதத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய 5, 6 ஆகிய இரண்டு மலர்களும் சேர்ந்து ஒரே பத்திரிகையாக வெளியாகியிருப்பதை நம் நேயர்கள் காண்பர். இதற்கு அடுத்த மலர் 1944 ஜனவரி மாதம் 15-ம் தேதி பிரசுரமாகி வழக்கம்போல் வெளிப்பட்டுவரும். ஆனால் இதனால் எப்பொழுதும் வெளியாகும் விஷயங்கள் குறைவுபடாது.

இவ்வித மாறுபாட்டிற்குக் காரணங்கள் பல. அவைகளுள் முதலாவது நமது சந்தா நேயர்களான ஆசிரியர்களுக்கு இப்பத்திரிகையின் சந்தா ஒரு ரூபாய்க்கு மேற்படக்கூடாது என்பது ஒரு முக்கிய காரணம். இப்போது இருக்கும் காகித விலையையும் அச்சடிக்கும் செலவையும் கவனிக்கும்போது மற்றப் பத்திரிகைகளைப் போல், ஒரு ரூபாயிலிருந்து ஒன்றரை ரூபாயாக வருஷ சந்தாவை உயர்த்தியிருக்கவேண்டும். இவ்விதம் உயர்த்தினால், ஏழை ஆரம்ப ஆசிரியர்களுக்குத்தான் இந்தச்சுமை ஏற்படும். இப்படிச்சந்தாவை உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தத்தைக் கொஞ்சம் தவிர்க்கவே.

இரண்டாவதாக, ஆசிரியர்களுக்கு வருஷத்தில் இரண்டு விடுமுறைகள் உண்டு; கோடை விடுமுறையும், கிறீஸ்துமஸ் விடுமுறையும். கோடை விடுமுறையில், நம் "பூங்கொத்து" ஏப்ரல், மே மாதங்களுக்குரிய இரண்டு மலர்களும் சேர்ந்து ஒரே பத்திரிகையாய் நமது பத்திரிகை ஆரம்பத்திலிருந்து வெளிவருகிறது. கிறீஸ்துமஸ் விடுமுறையிலும், இரண்டு மாத மலர்கள்

ஒன்றாகச் சேர்ந்துவருவது ஆசிரிய உலகத்திற்குப் பொருந்தியதென்றே கருதுகிறோம்.

நம் ஆசிரிய நேயர்களுக்கு நம் “**பூங்கோத்தின்**” பயனை யளிக்கவேண்டுமென்பதே எமது ஓர் முக்கிய நோக்கமாகும். எனவே நம் நேயர்கள் இதனையுணர்ந்து ஷை சிறு மாறுதலைப்பற்றிப் பாராமல் வழக்கம்போல் நம் பத்திரிகையை அன்புடன் ஆதரித்து அதன் பயனை எய்துவார்களாக.

நம் பாடசாலைத்தினக் கொண்டாட்டமும், கல்விக் கண்காட்சியும் வெகு திருப்திகரமாய் நடைபெற்றன. விவரங்களை “நம் பாடசாலை நிகழ்ச்சிகள்” எனும் தலைப்பினடியிற் காண்க. விசேஷமாக, கல்விக்கண்காட்சி முந்திய வருஷங்களைவிட இவ் வருஷம் மிக்கச் சிறந்து விளங்கியது குறிப்பிடத்தகும். முதலில் கண்காட்சி 3 நாட்களே திறந்துவைக்கத் திட்டம் செய்யப்பட்டது. ஆனால் பல பிரமுகர்கள் வேண்டுகோளால் அஃது 5 நாட்களாகத் திறந்துவைக்கப்பட்டது. இதைப்பற்றி நாமே சொல்வதைக்காட்டிலும் பிரமுக ஜில்லா அதிகாரிகள், பார்வையாளர் குறிப்புப் புஸ்தகத்தில் (Visitors' Book) எழுதிவைத்துள்ள குறிப்புகளே வாசகர்கட்கு இக் கல்விக்கண்காட்சியின் மேன்மையை விளக்கும்.

அக்டோபர்-மீ 18-ம் தேதியன்று கல்விக்கண்காட்சியின் திறப்பாளர் ஸ்ரீ டி. சிதம்பரம் பிள்ளை, B.A., திருச்சி ஜில்லா லேபர் அதிகாரி குறித்தது: “ஆசிரிய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சித்திரங்கள், படங்கள் முதலிய பொருட்களைப் பார்ப்பது வெகு இன்பந்தந்தது. கண்காட்சிக்கு வருபவர்கள் வெறுமனே பார்த்துவிட்டுப் போகாமல், ஒவ்வொரு பொருளையும் ஊன்றிப் படித்தால் அதிக பிரயோஜனம் அடைவார்கள். இக் கண்காட்சியைக் காணும் ஒவ்வொரு உபாத்தியாயரும் இப்பொருட்களையும் படங்களையும் பார்த்துக் குறித்துக்கொண்டு தத்தம் பள்ளிகளில் இவைகளைப்போல் எழுதியோ செய்தோ பிரயோகிக்க வேண்டுமென்பது எனது விருப்பம். இந்தக் கண்காட்சியை ஏற்படுத்துவதற்கு மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்ட மானேஜருக்கும் ஆசிரியருக்கும் வாழ்த்துதல் உரித்தாகுக.”

அக்டோபர்-மீ 22-ம் உ, கண்காட்சி முடிவடையும்போது, திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ S. முருகேச முதலியார், B.A., L.T. எழுதியது: “இன்று கண்காட்சியைக் கண்டேன். தலைமையாசிரியரும் சில ஆசிரியரும் என்னைக் கூட்டிக்கொண்டு காட்சிப்பொருட்களை விவரித்தார்கள். காட்சிப் பொருட்கள்

பற்பல விதமாயும் உண்மையிலேயே கல்வி புகட்டக்கூடியவை யாயுமிருந்தன. போதனாமுறை பாடசாலையின் முழுப் பாடத் திட்டத்தையும் விவரித்திருந்ததென்றே சொல்லவேண்டும். ஆசிரிய மாணவர்கள் இக் கண்காட்சிக்காக இவ்வளவு செய்தார் கள் என்பதே மெச்சத்தக்கக் காரியம். தலைமையாசிரியரும் மற்ற ஆசிரியர்களும் இக்கண்காட்சியை ஏற்படுத்தினதற்காக நான் வாழ்த்துகிறேன். ஆயிரக்கணக்கான ஜனங்கள் இக் கண் காட்சியைப் பார்த்தார்களென்று நான் அறிகிறேன். இன்னும் தென் இந்தியாவின் வேறு பாகங்களிலிருந்தும் இக் கண்காட் சியைக் காணவந்தார்கள். இக்கண்காட்சி மிகவும் மேன்மையாக இருந்தது.''

இங்ஙனம் ஷ கண்காட்சி முழு வெற்றிபெறுமாறு உழைத்த நம் மாணவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பெற்றோர் சங்கங்கள் : நம் "பூங்கோத்தில்" பெற்றோர் சங்க நிகழ்ச்சிகளைப் பிரசுரிப்பதற்கென இடம் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் சில சமயங்களில் பெற்றோர் சங்கச் செய்திகள் ஏராளமாய்க் குவிந்துவிடுகின்றன; அவைகளை முழு தும் பிரசுரிக்க இடமில்லாமையால், சுருக்கமான விவரத்தை மட்டும் எழுதுவோம். இதற்காக நேயர்கள் வருந்தாமல் இருக் கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சென்னை கல்வி இலாகா

(Proceedings of the Director of Public Instruction R. O. C. No. 773—W/42 dated 14-9-1943.)

ஷை சுற்றறிக்கையின்படி VIII வகுப்பு முடிவில் நடைபெறும் ஸர்க்கார் பரீட்சை விஷயமாய் VIII வகுப்பு முடிக்குமுன் யுத்த வேலையில் ஈடுபடுகிறவர்களைப்பற்றிய அறிக்கை பின்வருமாறு :—

VII, VIII, வகுப்புகளில் படிக்கும் மாணுக்கர்கள் யுத்த சம்பந்தமான வேலைகளில் ஈடுபடுவதின் காரணமாகப் படிப்பை நிறுத்தி விட்டால், பிறகு சமாதானம் ஏற்படும் காலத்தில் திரும்பவும் ஷை பரீட்சையை ப்ரைவேட்டாக அவர்கள் எழுதலாம். அப்போது ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் சேர்ந்து விட்டுப்போன நாட்களைச் சரிப்படுத்த ஆஜர்கொடுக்கத் தேவையில்லை. ப்ரைவேட் (Private) மாணுக்கன் என்ற ஹோதாவில் ஷை பரீட்சை எழுத அனுமதியுண்டு. பள்ளியில் சேர்ந்து படிக்கத் தேவையில்லை.

VI வகுப்பில் படிக்கும் மாணவன் அவ்வாறே யுத்த வேலைக்காகப் படிப்பை நிறுத்திவிட்டு, மறுபடி சமாதானம் ஏற்படும்போது ஷை பரீட்சை எழுத விரும்பினுல், VIII வகுப்பில் உடனே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இதனுல் VII வகுப்பில் படிக்கவேண்டுமென்பதில்லை என்று ஏற்படுகிறது.

விடுகவிகள்

1. பத்துப்பேர் பந்தாட; ஐந்துபேர் அமர்ந்திருக்க; வெய்யிலுடன் வாதாடி; நெருப்புடன் போராடுகிருன். இவன் யார்?

P. Gnanadickam.

2. கறுத்த மேனியன், காலாறுடையவன், உரியவன் தலை ஒட்டினையுண்டவன், பெரியபாரம் தாங்கிய பித்தனை இருவரும் சேர்ந்து ஒருவனைக் குத்தினர். இவன் யார்?

V. Krishnaswamy Aiyar,
Pethachinagar.

3. கரையில் போகும் கட்டைக்கடாவை எட்டிப் பிடிக்க முடியவில்லை. இது என்ன?

D. Selvarajan.

யாப்பியல்

(M. A. S. Udaiyar, Tamil Pandit)

REGISTRAR OF BOOKS 28 NOV 1943 MADRAS

அசை :—அசையாவது, எழுத்துக்கள் தனித்தாயினும், இரண்டு முதலாகத் தொடர்ந்தாயினும் சீருக்கு உறுப்பாய் வருதலாம். அது நேரசையெனவும் நிரையசையெனவும் இரண்டுவகைப்படும்.

நேரசை :—நேரசையாவது, ஒரு குறலேனும், ஒரு நெடிலேனும் தனித்தாவது, மெய்யோடு சேர்ந்தாவது வருவதாம்.

(உ-ம்.) வாழி வேந்தர். இத்தொடருள், வா என்பது நெடில் தனித்துவந்த நேரசை. ழி என்பது குறில் தனித்துவந்த நேரசை. வேந் என்பது நெடில் ஒற்றடுத்துவந்த நேரசை, தர் என்பது குறில் ஒற்றடுத்துவந்த நேரசை. எனவே நெடில் தனித்துவந்த நேரசை, குறில் தனித்துவந்த நேரசை, நெடில் ஒற்றடுத்துவந்த நேரசை, குறில் ஒற்றடுத்துவந்த நேரசை என நேரசை நான்காகும்.

நிரையசை :—நிரையசையாவது இரு குறிலேனும், குறிலும் நெடிலுமேனும் தனித்தாவது மெய்யோடு சேர்ந்தாவது வருவதாகும்.

(உ-ம்.) சிறுபுற மடல்தாரார். இத்தொடருள், சிறு என்பது குறிலிணைந்து தனித்துவந்த நிரையசை. புற என்பது குறினெடிலிணைந்து தனித்துவந்த நிரையசை. மடல் என்பது குறிலிணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை. தரார் என்பது குறினெடில் இணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை. எனவே குறிலிணைந்து தனித்துவந்த நிரையசை, குறினெடிலிணைந்து தனித்துவந்த நிரையசை, குறிலிணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை, குறினெடிலிணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசையென நிரையசை நான்காம்.

விடுகவி விடைகள்

(கொத்து 34, மலர் 4, பக்கம் 64)

விடைகள் :—(1) உப்பு. (2) நெருப்பு. (3) குத்தற்று. (4) வெளிச்சமற்று. (5) தண்ணீர்.

ஷ விடையளித்தவர்கள் :—B. M. Andrews, Sebastian, Puthur. M. Rethinam. B. Susaimanikkam, Kulathurampatti. G. Sebastian, P. Gnanadikkam. V. Ray. Mudimen.

மொழிப்பயிற்சி

(M. S. சுந்தரேச அய்யர், Tamil Pandit, Tindivanam.)

பதங்கள்

ரகர, றகர பேதம்

பரவை	... பறவை	இரந்தான்	... இறந்தான்
ஏரி	... ஏறி	துரை	... துறை
உரி	... உறி	கரை	... கறை
அரம்	... அறம்	கரி	... கறி
இரை	... இறை	கூரிய	... கூறிய

வாக்கியங்கள்

1. சமுத்திரத்திற்குப் பரவை என்று பெயர்.
   இந்தப் பறவை அழகாகப் பாடுகிறது.
2. ஏரி உடைந்துவிட்டதால் ஜலம் வீணாகப்போயிற்று
   சிறுவன் மரம் ஏறிக் கீழே விழுந்தான்.
3. அப்பா, கிச்சிலிப் பழத்தின் தோலை உரி.
   எங்கள் வீட்டில் இதுதான் நெய் வைக்கும் உறி.
4. கருமானிடம் சென்று ஒரு சிறிய அரம் வாங்கிவா.
   அறஞ்செய விரும்பு
5. கோழிக்கு இரை வைத்தாயா?
   நீ கிணற்றிலிருந்து தண்ணிரை இறை.
6. "இரந்தான்" என்ற சொல்லுக்கு "யாசித்தான்" என்பது பொருள்.
   ஒருவன் மரத்திலிருந்து கீழே விழுந்து இறந்தான்.
7. இவர்தான் லண்டனிலிருந்து வந்த துரை.
   அந்தக் குளத்திற்குத் துறை எங்கே?
8. வாய்க்காலுக்குக் குறுக்கே ஒரு கரை போடு.
   உன் வேஷ்டியில் ஒரு கறை இருக்கிறது.
9. கரி, பரி, தேர், ஆள் ஆகிய இவைகளே சதுரங்கப்படை என்று சொல்லப்படும்.
   கடைக்குப்போய் நல்ல காய்கறி வாங்கிவா.
10. கூரிய கத்தியால் மாம்பழத்தை அறுத்தேன்.
    பெரியோர்கள் கூறிய புத்திமதிகளைக் கடைப்பிடி.

பதங்கள்

னகர, ணகர வித்தியாசம்

மனை	... மணை	என்	... எண்
பனி	... பணி	பேன்	... பேண்
ஆனி	... ஆணி	மனம்	... மணம்
உன்	.. உண்	இவன்	... இவண்
பானம்	... பாணம்	ஆனை	... ஆணை

வாக்கியங்கள்

1. அந்த ஊரில் எனக்கு ஒரு மனை உண்டு.
ஆசிரியர் வருகிறார்; உட்காருவதற்கு மணை போடு.
2. இன்று பனி அதிகமாய் இருந்தது.
பெரியோர்களைக் கண்டால் பணி.
3. ஆனி மாதத்தில் கலியாணம் நடக்கும்.
சுவரில் ஆணி அடி.
4. உன் தமிழ்ப்புத்தகம் எங்கே?
ஆகாரத்தை நீ மெதுவாக உண்.
5. தண்ணீர் சுத்தமான பானம்.
வேடன் பாணம் எடுத்துப் புறாவைச் சுட்டான்.
6. என் பலகை உடைந்துவிட்டது.
பத்து என்பது ஒரு எண்.
7. சில குழந்தைகள் தலையில் பேன் இருக்கிறது.
தந்தை தாய்ப்பேண்.
8. ஏழைகளைப் பார்த்தால் என் மனம் வருந்துகிறது.
ரோஜாப்பூவில் மணம் அதிகம்.
9. இவன் நல்ல பையன்.
நீங்கள் இவண் சத்தம் செய்யாதீர்கள். (இவண் = இங்கே)
10. ஆனை ஒரு பெரிய மிருகம்.
அரசனது ஆணை மிகவும் கடினமாய் இருக்கிறது.

பதங்கள்

லகர, ளகர வேறுபாடு

வெல்லம்	... வெள்ளம்	ஒலி	... ஒளி
கலம்	... களம்	காலை	... காளை
குலம்	... குளம்	வால்	... வாள்
வலை	... வளை	புலி	... புளி
கல்	... கள்	அவல்	... அவள்

வாக்கியங்கள்

1. மழை பெய்ததினால் ஆற்றில் வெள்ளம் வருகிறது.
கரும்பிலிருந்து வெல்லம் எடுக்கின்றார்கள்.
2. இது எங்கள் நெற்களம்.
மூட்டையில் ஒரு கலம் நெல் இருக்கிறது.
3. இந்தக் குளம் அழகானது.
ஐயா! நீங்கள் எந்தக்குலம்.
4. நண்டு வளை தோண்டுகிறது.
இது மீன் பிடிக்கும் வலை.
5. கள் குடிக்காதே.
சுவர் வைக்கக் கல் உதவும்.

6. மின்சார ஒளி அதிகப் பிரகாசமானது.
காதினால் கேட்பது ஒலி.
7. இன்று காலை நான் கோவிலுக்குப்போனேன்,
காளை முட்டியதால் என் தங்கை கீழே விழுந்தாள்.
8. குரங்குக்கு ஒரு வால் உண்டு.
வாள் எடுத்து அப்பலகையை அறு.
9. காட்டில் புலி வசிக்கிறது.
நேற்றுக் குழம்பில் புளி அதிகம்.
10. தின்பதற்கு அவல் ருசியாக இருக்கும்.
அவள் யார்?

குறிப்பு.—தமிழில் ண, ன; ர, ற; ல, ள; முதலிய எழுத்துக்கள் சிறு குழந்தைகளுக்கு உச்சரிப்பில் முதலில் கொஞ்சம் துன்பத்தைக் கொடுக்கும். அனுபவத்தில் நாம் இதைப் பார்க்கிறோம். எழுதும்பொழுதும் பெரியோர்களுக்கும் இவை சரியாகத் தெரியவில்லையென்றால் குழந்தைகளைக் குற்றம் கூறுவது எப்படி? கூடிய வரையில் ஆசிரியர் முயற்சி எடுப்பாராகில் இப்பிழைகள் ஒருவாறு நீங்கக்கூடும். (முற்றிலும் நீங்கினாலும் நீங்கலாம்.)

இட வேறுபட்டாலும், சகவாச தோஷத்தாலும், கீழ் வகுப்பில் தக்கபடி தமிழ் போதிக்கப்படாமையாலும் மாணவரிடம் உச்சரிப்புப் பிழையும், எழுதுவதில் எழுத்துப் பிழையும் உண்டாகின்றன. மேலே காட்டியுள்ள மொழிப்பயிற்சிப் பாடங்கள் ஒருவாறு பயன் படக்கூடும். ஆசிரியர் பலவிதமான உபாயங்களைக்கொண்டு உச்சரிப்புப் பிழையை நீக்கலாம்.

தலை, தளை, தழை, தயை முதலிய சொற்களைப் பன்முறை வாக்கியங்களில் உபயோகப்படுத்தவேண்டும். பொருளை விளக்கவேண்டும். உச்சரிப்பைத் திருத்தவேண்டும்.

"ழ" என்ற தமிழ் எழுத்து அறிவுடையவர்களாலும் "ள" என்று உச்சரிக்கப்படுவதைப் பார்க்கிறோம். ஆகையினால் மழமழப்பு, கொழுமை, செழிப்பு, பழம், வாழை, விழி, அழகு, தாழம்பூ, மகிழம்பூ, குழல், யாழ், மழலைச்சொல், குழந்தை, தமிழ் முதலான ழகரம் கலந்த மொழிகளைத் திருத்தமாகக் குழந்தைகள் உச்சரிக்கிறார்களா என்று ஆசியர்கள் கவனிக்கவேண்டும். இல்லையேல் நாம் எடுத்துக்கொண்ட முயற்சி யாவும் பாழாகும். இளமைப்பருவத்தில் கவனிக்காமல்போனால் பின்னர் திருத்தக் கஷ்டமாகும்.

பலம், பழம், பயம்; வாலை, வாளை, வாழை, வாயை; சூளை, சூலை; அலி, அளி, அழி; தால், தாள், தாழ், தாய்; வலை, வளை, வழை முதலிய சொற்களெல்லாம் குழந்தைகளது உச்சரிப்பைத் திருத்துவதற்கு நல்ல உதாரணங்களாகும். இவற்றைப்போல, சிறந்த பல சொற்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்களாக!

பாடக்குறிப்பு

பாடம்: அரசியல். பாகம்: தேர்தல். வகுப்பு V.

நோக்கம்: தேர்தல் என்பதின் பொருளையும் தேர்தல் நடத்தப் படும் விதத்தையும் மாணவர்கள் நன்குணரப் போதித்தல்.

உபகரணங்கள்:—நகரப்பிரிவுகள், ஜில்லாப்பிரிவுகள், மாகாணப் பிரிவுகளை உணர்த்தும் தேச படங்கள். கெஜட்பிரசுரம்; நகரவாக் குரிமையாளர் ஜாபிதா, அபேக்ஷகர் நியமனச் சீட்டு, தேர்தல் சீட்டு, பெட்டி. [N. B.] நகரசபைத் தேர்தல் சம்பந்தமான அச்சி டப்பட்ட உபகரணங்கள் கிடைக்காவிட்டால், தயாரித்துக்கொள்ள வேண்டியது.

பீடிகை:—தற்கால ஆட்சி 'ஜனநாயக ஆட்சி' என்பதை வரு வித்து அதற்கு அப்பெயர் வரக்காரணம் ஜனங்களின் பிரதிநிதிகளே ஆட்சியைப் பொறுப்பாய் நடத்துவதாகும் என்பதையும் குறிப்பிட்டு நோக்கத்தை வெளியிடல்.

முறைவிளக்கம்:—நகரசபைத் தேர்தல் விஷயத்தைக்கொண்டு அவர்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் சிறிதாகிலும் வரு வித்துப்பின்னர் அவைகளைத் தொகுத்துக்கூறுதல். வாக்காளர்கள் யார் என்பதுபற்றியும் வாக்குரிமைக்கு யோக்கிதாம்சம் பெற்றவர்கள் யார் என்பதுபற்றியும் தெளிவாய்க் கூறல். உபகரணங்கள் ஜாப்தா வில் கூறப்பட்டவற்றின் ஜாபிதாவை ஒவ்வொன்றாக வாசிக்கச்செய்த பின்னர் அவை தயாரிக்கப்படும் விதம் உபயோகம் முதலியவற்றை விளக்கமாகக் கூறல். **(பின்னர் போலித்தேர்தல் ஒன்று நடத்திக் காண்பிக்கவும்).** தேர்தலுக்குரிய ஒழுங்குகளை அவ்வப்போது தெளி வாய்க் கூறுதல், அத்தியாவசியம். ஜில்லா சபை மாகாண சபை அங் கத்தினர்களும் இம்முறையைத் தழுவி தேர்ந்தெடுக்கப்படுவதைக் குறிப்பிடுக. போலித்தேர்தல் ஒன்று பிள்ளைகளைக்கொண்டு நடத்திக் காட்டுவதுதான் சிறந்த முறையாகும்.

அப்பியாசம்:—1. தேர்தல் என்றால் என்ன? 2. வாக்காளரின் யோக்கியதாம்சங்கள் யாவை? 3. அபேக்ஷகர் நியமனச் சீட்டில் எழுதப்பட்டிருப்பவை யாவை? 4. தேர்தல் யாரால் எவ்விதம் நடத்தப்படுகிறது? 5. எந்த அபேக்ஷகர் அங்கத்தினராக நியமிக்கப் படுவர்? 6. ஜில்லா சபை, மாகாண சபை முதலியவற்றிற்கு அங்கத் தினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களின் யோக்கியதாம்சமும், அபேக்ஷகர்களின் யோக்கிதாம்சமும் யாது? 7. உங்கள் வகுப்புக்கு ஒரு சட்டாம்பிள்ளையைத் தேர்தல்மூலம் நியமியுங்கள்.

அவரை - ஆமணக்கு தர்க்கம்

(By T. S. G.)

பாடசாலை விட்டவுடன் வீட்டுக் கொல்லைத்தோட்டம் காணச் செல்லுகிறான் மாணிக்கம். பேச்சுக்குரல் கேட்பதுபோலிருக்கிறது. நாலாபக்கமும் உற்றுப்பார்க்கிறான். அவரைக்கொடி வளைந்து வளைந்து, ஆடியாடி அருகில் வர அவனை அழைத்ததுபோலிருந்தது. தலைகொள்ளா பாரந்தாங்கிய ஆமணக்குச்செடி, தலையை ஆட்டி யாட்டி அவனைக் கூப்பிட்டதுபோல் இருந்தது. சற்று அணுகினான். பேச்சு வரவர ஓங்கலாயிற்று. மாணிக்கத்திற்கு ஆச்சரியம் அதிகரித்தது. "செடிகள்கூட இப்படிப் பேசிக்கொள்ளுகின்றனவே! என்ன மும்மரமான பேச்சு! எவ்வளவு கெட்டிக்காரத்தனமாகப் பேசுகின்றன? என்ன, விந்தையாய் இருக்கிறதே!" எனச் சொல்லிக் கொண்டே சமீபம் சென்று பேச்சைக் கவனித்துக் கேட்கிறான்:—

அவரை:—"முத்தண்ணு" என்று பெயர் வைத்தால் உனக்குப் பொருத்தமாய் இருக்கும் (ஆமணக்கு = கொட்டைமுத்து) உன் குணத்துக்கு ஏற்ற பெயர் அதுதான்.

ஆமணக்கு:—அப்படியா! நேராய்த் தலைநிமிர்ந்து நிற்கக்கூட வலுவற்ற அற்பன் நீ. பிறர் உதவி நாடாமல் நிற்கமுடியாத உனக்குப் பேச்சு எதற்கு? தலை குனிவதுதான் உன் சுபாவம். வெட்கம்!

அவரை:—ஆஹா! நான் வலுவற்றவன் என்பதை மாத்திரம் எண்ணி நீ ஏசுகிறாய்போலும்! என் இனத்தாரின் வலுவை நீ அறியாய். தாவர உலகத்திலே என் குடும்பத்தைப்போல் அவ்வளவு வகையும் தொகையுமுள்ள மற்றொரு குடும்பம் உளதோ? என் இனத்தாரின் குடும்ப வகைகளையெல்லாம் யான் இப்போது கூறுவேனாகில் உன் உடல் நடுநடுங்கிப்போய்விடும் என்பது திண்ணம்.

ஆமணக்கு:—ஏன் ப்ரமாதமாகப் பேசுகிறாய்? நீ இந்தப் பந்தலில் வளராவிடில் வாழமுடியுமா? உன் வாழ்க்கைப்பந்தலைப்போல் ஏன் வாய்ப்பந்தல் போட்டுப் பிழைக்கிறாய்?

அவரை:—முத்தண்ணு! ஏன் நான் பந்தலில் வளருகிறேன் என்றுகூட உனக்குத் தெரியவில்லையே! நான் சிறு செடியாக இருக்கும் பருவத்தில் கொழுகொம்புகள் ஊன்றியும், பின்னர் நேர்த்தியான பந்தல் அமைத்தும் என்னை மக்கள் பராமரிக்கிறார்கள். ஏன் தெரியுமா? நூற்றுக்கணக்கான கிளைக்கொடிகளை நான் விடுவேன் என்றும், கொத்துக்கொத்தாய்ப் பூத்து, குடலைகுடலையாய்க் காய் காய்த்துக் கூடைகூடையாய் உதவுவேன் என்று அந்த மக்களுக்குத் தெரியும். என்னை அன்புடன் விரும்பாதவர்கள் யார்? ஆவலுடன் என்னைப் புசியாதவர் யார்? உன்னைப்போலவா? உன்னைப் பார்க்கவும்

அருவருப்பு; மூகர்ந்தால் நாற்றம்; வாயில் போட்டால் கசப்பு; என் உன் பெயரைக் கேட்டாலுமே வாயாலெடுப்பு—வாந்தி-வாந்தி—ஹும்-ஹும்.

ஆமணக்கு:—உன் அற்பபுத்தி எங்கே போகும்? உன் அற்ப வாழ்க்கையைப்போலதான் உன் புத்தியும் இருக்கிறது. உன் இனத்தில் பலர் இருக்கின்றனர் என்ற கர்வம் ஒன்று. உன்னைப் பலர் விரும்பிப் புசிக்கின்றனர் என்ற இறுமாப்பு மற்றொன்று! உன் யோக்கியதையைக் கேள். உன்னையே மக்கள் அதிகமாய் உணவாக்கிக்கொண்டாலும் அல்லது உன் இனத்தில் சேர்ந்த மற்றொரு அற்பன் இருக்கிறானே—மொச்சைக்கொட்டையான். அவ்விதைகளைக் கொஞ்சம் அதிகமாய்ப் புசித்துவிட்டாலும், மக்கள் படும்பாடு எனக்கல்லவா தெரியும்! என் எஜமான் திரு. வைத்தியர் என்னை நாடி (ஆமணக்கு எண்ணெய்) அவர்களின் வயிற்றுக்கோளாறுகளைத் தீர்க்கிறார். அச்சமயத்தில் உன் இனத்தான் வாங்கும் பாட்டு-அப்பப்பா......

அவரை:—யாராவது உன்னைப்போல் தெளிவற்றுப்பேசினாலும், உளறிக்கொட்டினாலும், “என்னடா—விளக்கெண்ணெய்ப் பேச்சு—வழ-வழ—என்று” என மக்கள் கூறுவது வழக்கம். அது முற்றிலும் சரியே—உன் பேச்சு அப்படித்தான் இருக்கிறது. முதன்முதலில் உன் பூவைப்பார்த்து பூ என்று யாராவது கூறுவார்களா? நிறம், அழகு, வாசனை, தேன்—ஏதாவது மணம் குணம் உண்டா? போகட்டும், நீ ஒரு பூர்ணமான பூதானா (complete flower)? ஒரே வீட்டில் ஆண்பூக்கள், பெண்பூக்கள் ஒற்றுமையுடன் ஐக்கியமாய் வாழவேண்டாமா? என் வீட்டில் பார்! ஆண், பெண்கள் சேர்ந்து வாழுகின்றனர். ஆகவே பூரணமான பூக்கள் எங்களிடமுண்டு. என்ன விகாரமான வாழ்க்கை உன் வாழ்க்கை? கேவலம்.

ஆமணக்கு:—“அற்பனுக்குப் பவிசு வந்தால் நடுராத்திரியில் குடை பிடித்துக்கொள்ளுவான்” என்ற பழமொழிக்கு நீதான் இலக்காய் விளங்குகிறாய். பந்தலில் ஒய்யாரமாய் வாழும் காலம் எத்தனை நாளுக்கு? உன் ஆபத்துக்களையும் உன் விரோதிகளையும் நீ அறியமாட்டாயோ? உன் ஜீவியம் கஷ்ட ஜீவியமன்றோ? உன் குருத்துக்களையும் பூக்களையும் ‘அசுவுணி’ என்னும் செடிப்பேன்கள் உருக்குலைக்கின்றன. உன் விதைகளை உளுவண்டுகள் புகுந்து தூளாக்குகின்றன. உன்னை முளைக்கவைக்கவேண்டுமானால் 100-க்கு 5 கூடத் தேறுவது இல்லை. ஆனால் என் விதையைப் பார். மேல் தோடு எவ்வளவு உறுதி! எந்தப் பூச்சியாவது, வண்டாவது என்னைத் தாக்க முடியுமா? விரோதிகள் என்னை அணுகமுடியாதபடி முட்கள் நிறைந்த காய்களாகவும் நெற்றுக்களாகவும் என் விதைப்பெட்டிகள் விளங்குகின்றன.

181982
சென்னை-600 008

இதைத் தெரிந்துகொள்ளாமல் அருவருப்பான தோற்றம் என என் புஷ்பங்களைப் பழிக்கிறாய். அழகாய் இருந்து பாழாய்ப்போவதற்கு எனக்கு விருப்பமில்லை. ஒரு சிறு சம்பவம் சொல்லுகிறேன் கேள். ஒருநாள் ஒரு பறவை என் நெற்று ஒன்றைக் கௌவிக் கொண்டுபோகையில் அது வெடித்தது. அதிலிருந்து விதைகள் விசையுடன் கிளம்பிப் பறவையின் முகத்தில் மோதின. அடி பொறுக்கமாட்டாமல் கீழே அதைப் போட்டுவிட்டுப் பறந்துசென்று விட்டது. இச்செய்தியைக் கேட்டு அதுமுதல் எந்தப் பறவைக்கும் என்னைக் கண்டால் பயம்.

உன்னைச் சமையலுக்காக விரும்பி மக்கள் பந்தல் போடுகிறார்கள். அதுவும் ஒரு பருவத்தில்தான். எனக்கு மக்கள் உதவி அதிகம் தேவை இல்லை. நானே எங்கு வேண்டுமானாலும் பரவிக்கொள்ளுவேன். ஒரு சிறந்த வைத்தியப்பொருளாயும் வியாபாரப்பொருளாயும் நான் இருப்பதால் எனக்கு உன்னைவிட மதிப்பு அதிகம். ஆயினும் உன்னைப்போல் வீண் கர்வம்கொள்ள எனக்கு இஷ்டம் இல்லை. பக்கத்தில் இருக்கிற என் நண்பன் திரு. வெண்டைச்செடியாரைக் கேள்.

மாணிக்கம்! மாணிக்கம்!! எழுந்திரு. எவ்வளவு நேரம் தூங்குவது?

தன் தாயார் குரல்! அவரை-ஆமணக்குப்பேச்சு முடிவதற்குள் பொழுது விடிந்தது மாணிக்கத்துக்குத் தெரியாது. எழுந்தான். தான் கொல்லைப்புறத்தில் இல்லை. படுக்கையின்மேல்தான் இருக்கிறான். உடனே கொல்லைத்தோட்டம் நோக்கி ஓடிப்பார்த்தான். காற்றின் வேகத்தால் அவரைக்கொடி ஆடிக்கொண்டிருந்தது. ஆமணக்குச்செடி தலையை அசைத்துக்கொண்டிருந்தது. “கனவு கண்டேனோ?” முதல் நாள் ஆசிரியர் இயற்கைப்பாடம் கற்றுக்கொடுத்திருந்த விஷயமும் ஞாபகத்துக்கு வந்தது.

விகடம்

கடைக்காரன்:—என்னய்யா! நாள்தோறும் இப்படி உனக்குக் கடன் கொடுத்துவிட்டு நான் எங்கே போகிறது?

குடியானவன்:—வேறே ஒரு பக்கமும் போகாதிங்க. உங்க ஊருக்கு போங்க.

கடைக்காரன்:—நீ நல்ல யோக்கியன்தானப்பா!

குடியானவன்:—அப்படி இல்லாமலா நிதம்நிதம் கேக்கிறதை குடுக்கிறீங்க.

C. Michael.

சிறு கதை

மானீட்டர் முனியன்

(T. Savarirajan)

ரெத்தினம் பிள்ளை, உடையார்பாளையம் "ராஜன் உயர்தர ஆரம்பப் பாடசாலை" 5-ம் வகுப்பு ஆசிரியர். அங்கபாரத்திலும், நடை உடை, பாவனைகளிலும், முதிர்ந்த அறிவிலும் உபாத்தியாயர் என்ற பாத்திரத்திற்கு முற்றிலும் உரியவராய் விளங்கினார். மாணவ உலகத்தாலன்றி, ஏனைய கல்வி அதிகாரிகளாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டவர் என்றால், வேறு என்ன வேண்டும்?

செப்டம்பர் 5-ந் தேதி, திங்கள்கிழமை பிள்ளை அவர்கள் பள்ளிக்கு வந்தார்; வழக்கம்போல் கைக்கெடியாரத்தைக் கழற்றி வகுப்பிலுள்ள சுவர் அலமாரியில் வைத்துப் பத்திரமாய் மூடினார். மணியும் பத்தடித்தது; பள்ளியும் தொடங்கியது. கால்வருஷப் பரீக்ஷைக்கு ஒருவாரமேயிருந்ததால் ரிவிஷன் பாடம் வெகு ஜரூராய் நடந்தது. சரித்திரப்பாடப் பீரியடு வந்ததும் அசோகர் பாடத்தில் அநேகக் கேள்விகள் கேட்டபிறகு, தான் புதிதாய் தயாரித்து வைத்திருக்கும் அசோகர் காலத்திய கல்வெட்டுகள், அவரின் இராஜ்யப் பிரிவு, பரப்பு, அவரின் உருவப்படம் முதலிய சார்ட்டுகளைக் காட்டப் பிரியம்கொண்டு, மானீட்டர் முனியனைக் கூப்பிட்டு அலமாரியிலுள்ள அப்படங்களை எடுக்கச்சொன்னார். முனியனும் தன்னால் கூடுமான வரையில் எக்கி, எக்கி அவைகளை எடுத்துக் கொடுத்தான். அன்றையப் பாடம் என்றுமில்லாதவிதமாய் நேர்த்தியாய் முடிந்தது. "உபகரணங்களுடன் போதி" என்ற உண்மை மொழியை அன்றுதான் பிள்ளை அவர்கள் உணர்ந்தார். மாணவர் அந்தப் படத்தைக் கூர்ந்து கவனித்த விதத்தையும், அசோகரின் வசீகரத் தோற்றத்தைக் கண்டு அதிசயித்ததையும் அவர் தம் மனக்கண்முன் கொண்டுவந்து ஆனந்தித்தார். கடைசியாய் அதேபோல் மற்றப் பாடங்களுக்குத் தக்க உபகரணங்களைத் தயாரித்துத்தான் போதிக்கவேண்டும் என்ற முடிவுக்கு வரலானார்.

மாலை மணி 5 இருக்கும். பிள்ளைகள் குதூகலத்துடன் தாயைத் தேடி ஓடும் இளங்கன்றுகளைப்போல் பறந்தோடினர். ஆசிரியரும் வீட்டிற்குச் செல்லும் நோக்கத்துடன் கெடிகாரத்தை எடுக்கலானார். கெடியாரம் அங்கிருந்தால்தானே அகப்படும். அலமாரி முழுவதும் தேடினார், கிடைக்கவில்லை. கவலையும் துக்கமும் மாறி மாறி வர ஒன்றும் தோன்றாதவராய்த் திகைத்துநின்று சற்று யோசித்தார். முனியன் சார்ட்டுகள் எடுக்க அலமாரியைத் திறந்தது ஞாபகம் வந்தது. அவன்தான் எடுத்திருக்கவேண்டுமென்று முடித்தார். ஆயினும் முனியனின் வெள்ளையுள்ளமும், சாதுத்தன்மையும் அவ்விதம் அவனைப்பற்றி நினைக்க இடம்கொடுக்கவில்லை. மனிதத்தன்மையினால் ஜெயிக்கப்பட்டு, சிறுவன் விளையாட்டுச் சாமான் என்று நினைத்து

எடுத்துப்போயிருப்பான், நாளை வந்ததும் விசாரிப்போம் என்று முடிவுசெய்து, அத்தனை நாள் தன் மாமனாரின் ஞாபகார்த்தமாய் வைத்திருந்த வஸ்துத் தொலைந்ததால் என்னென்ன ஆபத்துகள் நேரப்போகிறதோ என்ற விசனத்துடன் வீடுசேர்ந்தார்.

மறுநாள் வெகு சீக்கிரத்தில் பள்ளிக்கு வந்தார். வழியில் தென்படும் சிறுவர்கள் எல்லோரும் திருட்டுப்பயல் முனியனாகவே காணப்பட்டது. மணியும் ஆயிற்று; பள்ளியும் தொடங்கியது; முனியனும் வந்தபாடில்லை. நேரம் ஆக ஆக ஆசிரியரின் கவலையும் அதிகரித்தது. கவலை அதிகரிக்க அவரின் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. உடனே தன் சேனைப்பலமாகிய மாப்பிள்ளை பெஞ்சிலுள்ள சில முரடர்களை முனியன் வீட்டிற்கு அனுப்பி அவனைக் கையோடு கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார்.

முனியன் தன் தாயாருக்கு வீட்டு வேலைகளில் சிறிது உதவி செய்துவிட்டு, தாமதமாய்விட்டதால் பள்ளிக்கு வேகமாய் வந்து கொண்டிருந்தான். வலியர்களுக்கு முனியன்மேல் வஞ்சம்தீர்த்துக் கொள்ள இதைவிட ஏற்ற சந்தர்ப்பம் எது? அவன் வகுப்பில் மானீட்டர் அல்லவா? எனவே புலிப்போல் பாய்ந்து பிடித்தனர். இருவர் கால்களைப் பிடிக்க, இருவர் கைகளைப் பிடிக்க மானீட்டர் ஆகாயத்தில் மிதக்கலானார். முனியனுக்கு விஷயங்கள் அனைத்தும் நூதனமாகவே இருந்தன. பாவம்.

ஆசிரியர்: "முனியா, என்ன வேலையடா செய்தாய்? உன்னை நம்பி மானீட்டராய் வைத்ததற்கு என் கெடியாரத்தையா அடித்துக் கொண்டுபோகவேண்டும்? வேண்டாமடா, ஆசிரியர் குருவல்லவா? அவர் வஸ்துவைத் திருடுவது மகா பாதகமடா, கொடுத்துவிடு. எங்கேயடா வைத்திருக்கிறாய்?" என்று மூச்சுவிடாமல் கதறினார். அவர் தொனியில் சாந்தமும் கோபமும் தாண்டவமாடின.

முனியன்: "நான் எடுக்கவில்லை சார்; கெடியாரம் எங்கிருந்ததென்றுகூடத் தெரியாதே; ஏன் என்மேல் இவ்வித சந்தேகம்; உங்களது கெடியாரம் எனக்கெதற்கு; மணிகூட இன்னும் சரியாய்ப் பார்க்கத் தெரியாதே."

ஆசிரியர்: "அடே பயலே, என்ன போக்கிரித்தனம், மரியாதையாய்க் கொடுத்துவிடுகிறாயா, பிரம்பை எடுக்கட்டுமா?"

முனியன்: "நான் கெடியாரத்தை எடுக்கவே இல்லை சார், இது சத்தியம். நான் நிரபராதி என்று ருசுப்படுத்தவும் முடியாது. எல்லாம் அந்த ஈசனுக்குத்தான் தெரியும்."

ஆசிரியர்: "அதிகம் படித்த போக்கிரிப்பயலே, இதோபார், உண்மை தானாகவே வரப்போகிறது." ஆசிரியர் கண்கள் சிவந்தன, கைகள் பிரம்பை நாடின. பிறகு சொல்லவும் வேண்டுமா? முனியன் உடம்பில் அடிபடாத இடமில்லை. ஆசிரியர் கோபமும் தணியவில்லை; பையன் கதறினான். மாணவர்களில் சிலர் பொறுமையினால் கேலி

சிரிப்புச் சிரித்தனர். உண்மைத் தோழர்கள் முனியனின் கபடற்றத் தன்மைக்காக உடல் துடித்தனர்; கண்களில் நீர் கலங்கியது. முனியன் அடிபொறுக்கமாட்டாமல் எடுத்ததாக பொய்யாவது சொல்லலாமென்று நினைத்தான், பிறகு உண்மையில் எங்கிருந்து அவ்வஸ்துவைக் கொடுப்பதென்று நினைத்து மௌனமாயிருந்துவிட்டான். அடித்த அடியால் பிள்ளையவர்களின் கைகள் நோவ, பிரம்பைப் போட்டுவிட்டு, அவனைத் தலைமை ஆசிரியரிடம் இழுத்துச்சென்று, விஷயம் அனைத்தையும் சொன்னார். பிறகு இருவரும் அலமாரியை சோதனை போட்டனர். மாயமாய் மறைந்த வஸ்து தென்படவில்லை. முனியனை நயத்தாலும், பயத்தாலும் வினவினார். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. முடிவில் அவரும் அவனை நையப் புடைத்ததுடன், பள்ளியைவிட்டும் நீக்கினார். ஒன்றும் அறியா இளைஞன் எல்லாம் ஈசன் செயல் என்று, கடந்த நான்காண்டுகளாய்ப் படித்த தாய்ப்பாடசாலையை நீங்க மனமற்றவனைப்போல் திரும்பிப் பார்த்துக்கொண்டே வீடு சென்றான்.

ஓராண்டு மறைந்துசென்றது. முனியனும் வகுப்பில் இல்லாததால் கெடியார விஷயமே ரெத்தினம் பிள்ளைக்கு மறந்துபோய்விட்டது. சமயாசமயங்களில் நினைத்துக்கொண்டாலும், திருடனைச் சரியாய்த் தண்டித்துவிட்டோம், இனி அவன் ஜீவியத்திலேயே திருடமாட்டான் என்று சொல்லிக்கொள்வார்.

கோடை விடுமுறைக்குப்பிறகு பாடசாலை திறந்தபொழுது பள்ளியில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டன. தலைமை ஆசிரியர் மாற்றப்பட்டார். ரெத்தினம் பிள்ளைக்கும் மாணவர்களுடன் புரமோஷன் கிடைத்தது. புதிய வகுப்பிற்குத் தன் சாமான்கள் அனைத்தையும் அகற்றவேண்டியதாயிற்று. மாணவர்களின் உதவியைக்கொண்டு அலமாரியிலுள்ள அனைத்தையும் அகற்றியபிறகு தட்டுப்பலகையைத் துடைத்துவைக்கலாமென்று வெடுக்கென்று பிடுங்கினார். என்ன அதிசயம்! கெடியாரம் பொத்தென்று கீழே விழுந்தது. ஒன்றும் சொல்ல முடியாதவராய் அதை எடுத்துப்பார்த்தார். பழைய விஷயங்கள் கண்முன் நடப்பனபோல் தென்பட்டன. முனியன் சரித்திர சார்ட்டுகள் எடுக்கும்பொழுது, மேலேயிருந்த கெடியாரம் நழுவி பலகைக்கும் சுவருக்கும் இடையில் அகப்பட்டு ஒளிந்துகொண்ட விஷயம் புலப்பட்டது. முனியனின் பரிதாபக் கெஞ்சுதல் ஞாபகத்திற்குவர தன்னையுமறியாமல் "முனியா உண்மையை அறியாமல் உன் வாழ்நாளைக் கெடுத்தேனே, உன் பெயரையும் கெடுத்தேன்" என்று வாய்விட்டு கதறினார். என்ன பிரயோஜனம். அடிப்பட்ட மானீட்டர் முனியன் அடியின் அழுக்கத்தினால் விஷயங்கள் நடந்தேறிய ஒரு வாரத்திற்குள்ளாக மறு உலகம் சென்றுவிட்டான்.

கிராமப் பாடசாலையும் சுயநோக்க முயற்சியும்

(R. Vethamuthu, Headmaster, Ariyanampettai)

கல்வி என்னும் இச்செல்வக்கருத்தை இளங்குழந்தைகளுக்குப் புகட்டிப் பழக்குவது ஆசிரியர் கடமை. தொட்டில்பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது ஆன்ருேர் வாக்கு. ஆசிரியர்கள்முன் ஆறு வயதுக் குழந்தைகளை அனுப்பிவைத்துவிட்டு பெற்ருேர்கள் ஒரு சிரமமும் இன்றி இருந்துகொள்கின்றனர். குழந்தையின் கல்வியைப்பற்றிக் கவனிப்பதில்லை. அதிலும் பெண் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதென்ருலோ பெருங் கஷ்டம். கேலி, தெரிந்ததெல்லாம் உளருகிருர்கள். "அடுப்பூதிப் பெண்ணுக்கு படிப்பா'' என அநேகமாய் கிராமங்களில் நடப்பது கண்கூடு. பெற்ருேர் சங்கங்களில் விளக்கிக் கூறினுலும் அவ்வுபதேசம் அன்று இரவோடு சரி. பாடசாலைக் குழந்தைகளில் சிலர் பாடசாலைக்கு வராவிட்டால் வீடுதோறும் சென்று கூப்பிடவேண்டி இருக்கிறது. கூப்பிட்டாலும் அதுசமயம் உடனே அனுப்பிவைப்பதுமில்லை. ஐயா, வாத்தியாரே போ பையன் வருவான். அல்லது இன்றைக்கு வீட்டில் வேலையிருக்கிறது நாளைக்கு வருவான் போ. பல சாக்குகள் சொல்வார்கள். அதுசமயம் ஆசிரியர்கள் சகிப்புத்தன்மையைக் கையாடவேண்டியிருக்கிறது. அதற்கு மீறிப் பேசினுல், கடுபிடி. எப்படியெனில்,

போ ஐயா, என் பையன் படிக்கிலே இன்னு உனக்கு வெகு கவலே என்னமோ. நம்ம பையன் பேரைச்சொல்லி சம்பளம் வாங்கித் திங்கலாமின்னு இப்படி ஊடோய் புள்ளகிலே கூப்புட்டுகிட்டு திரிரே. போ ஐயா இன்ஞ, என்னென்னமோ பேசரையே, உன்னைப்போல எத்தனை வாத்தியாரு இந்த ஊருக்கு வந்திருப்பா, ஒரு புட்டுசன் போட்டா உன்னக்கூட தூக்கீருவே தெரியுமா.

இதுசமயம் ஆசிரியர் மனம் எவ்வாறு இருக்கும் என சிந்திக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட கிராமப் பெற்ருேர்கள் மத்தியில் கஷ்டப்பட்டு குழந்தைகளைப் பல சமாதானங்கள் மத்தியில் கூட்டிவந்து பாடசாலையில் அமரச்செய்து தினசரி ஆஜர் பட்டி பதிந்து வகுப்பை ஆரம்பித்தால் அதுசமயம் சில பெற்ருேர் பாடசாலைக்கு கொஞ்சம் தூரத்திலிருந்துகொண்டு அடே ராமா! அடே சுப்பா!! அடேயப்பா!!! வாடா ஒங்கப்பனுக்கு வயலுக்குச் சோறு கொண்டு போகனும்......என்று உரக்கக் கத்துவார்கள். அதுசமயம் வகுப்புப் பிள்ளைகள் சார், சார் சுப்பனை அவுங்காயி கூப்பிடுது என்று கத்துவார்கள். ஆசிரியர் சத்தத்தை அடக்கிவைப்பதற்குள் அந்த அம்மாள் பாடசாலைக்குள் புகுந்து, வாத்தியாரே, சுப்பனை உன்னே யார் கூட்டி வரச்சொன்ஞ? வயலுக்கு சோறு கொண்டுபோகனும் வரச்சொல்லு.
ஆசிரியர்: அம்மா ஆஜர் போட்டாய்விட்டதே எப்படி அனுப்புவது?

அதிகாரிகள் வந்தால் என்ன செய்வேன். என்னது? அதிகாரிவந்தா லெனக்கென்ன என பல தர்க்கம் ஏற்படுகிறது. இதற்குள் மணி 11 ஆகிவிடும். இம்மாதிரி சில கிராமங்களில் நடப்பதை இன்றும் பார்க் கலாம். இவ்விதக் கிராமங்களில் ஆசிரியர்கள் எவ்வித முயற்சியைக் கையாடலாம் என ஆராய்வோம்.

(தொடரும்)

பெற்ருேர் சங்கங்கள்

1—10—43-ல் கோவில்பட்டி தாலூகா கீழமுடிமன், R. C. பாடசாலை பெற்ருேர் சங்கக்கூட்டம் ஷை ஊர் S. அந்தோணி முதலி யார் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. "ஆசிரியரும் பெற்ருேரது ஒத்துழைப்பும்" எனும் பொருளாக திரு. V. ராய் என்பவர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

10—10—43-ல் கரூர் தாலூகா வாங்கப்பாளயம் போர்டு ஆரம் பப் பாடசாலையின் பெற்ருேர் சங்கக்கூட்டம் ஸ்ரீ S. வீராஸாமி பத் தர் M.A., L.T. (Asst. D. E. O.) அவர்களது தலைமையின்கீழ் நடைபெறலாயிற்று. அவ்வமயம் திரு. கணேச மூர்த்தி (Prob. D. E. O.) அவர்களும், திரு. விவேகாநந்தம்பிள்ளை B. A., L. T. அவர்களும், ஸ்ரீ வைத்தியநாத அய்யர் (Senior Dy. Insp.) அவர் களும், திரு. பெருமாள் கவுண்டர் B.A., L.T. (Junior Insp.) அவர் களும், யுத்தப்பிரசாரகர் ஸ்ரீ நடராஜன் அவர்களும் கல்வியின் அவ சியத்தைப்பற்றிப் பேருரைகள் நிகழ்த்தியபின் கூட்டம் இனிது கலைந்தது.

S. R. Varadarajulu Naidu.

17—10—43-ல் முசிரித் தாலுகா எயிடெட் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் யூனியன் மஹாநாடு, துரையூர் ஜமீன்தார் உயர்தர ஆரம்பப் பாடசாலைக் கட்டிடத்தில் ஸ்ரீ S. வீராஸாமி பத்தர் M. A. L. T. (Asst. D. E. O.) அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ் வமயம் ஸ்ரீ யுத்தபிரசாரகர் ஸ்ரீமதி. சிவகாமு அம்மையவர்களாலும், டிவிஷனல் யுத்தபிரசாரகராலும் யுத்த சம்பந்தமான சொற்பொழிவு கள் நிகழலாயின. திரு N. சுப்புசெட்டியார் B.SC., L.T. அவர்கள் ஆரம்பக் கல்வியைப்பற்றி சொற்பொழிவாற்றினர். ஆரம்ப ஆசிரியர் களுக்கு ஏனையோர்களைப்போல், யுத்த அலவன்ஸ், அட்வான்ஸ் முத லிய உதவிகளை யளிக்கக் கேட்டுக்கொள்ளும் பல தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின. வந்தனோபசாரங்களுடன் மகாநாடு இனிது கலைந்தது.

T. M. Sundaresa Sarma, Secretary.

25—10—43-ல் மயிலம் போர்டு ஆண் பாடசாலையில் பெற்றோர் சங்கக் கூட்டம் தென்னாற்காடு ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ S. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் அவர்களின் தலைமையின்கீழ் கூடியது. அவ்வமயம், கல்வியின் அவசியத்தைப்பற்றி திருவாளர்கள் T. R. ஸ்வாமிக் கண்ணு B.A.L.T. அவர்கள் (Dy. Insp.) துரைசாமி அய்யரவர்கள் (தமிழ் கல்லூரித் தலைவர்); S. A. மல்லிங்கஸ்வாமி செட்டியாரவர்கள் (பேராசிரியர்) ஷண்முக முதலியார் அவர்கள்: சிவலிங்க முதலியாரவர்கள் (பேராசிரியரவர்கள்) முதலியவர்கள் இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இரவில் ஷை பாடசாலை மாணவர், மாணவிகளால் "சிறுத்தொண்ட நாயினார்" என்னும் சரித்திரம், வெகு நேர்த்தியாக நாடகமேடையில் நடத்திக் காட்டப்பட்டது. அதில் திறமையுடன் நடித்த பத்மா என்னும் மாணவிக்கு ஸ்ரீ Dr. D. R. S. நவமணி ராஜு அவர்களால் ஒரு வெள்ளிப்பதக்கப் பரிசு அளிக்கப்பட்டது. தலைவர், முதலியவர்களுக்கு வந்தன உபசாரங்கள் கூறப்பட்டதும் ஷை கூட்டம் இனிது முடிவுற்றது.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

பாடசாலைதினக் கொண்டாட்டம்

1. **கல்விக் கண்காட்சி:**—18-10-43 காலை 11 மணிக்கு நம் பாடசாலைக் கல்விக் கண்காட்சி இந்த ஜில்லா லேபர் ஆபீஸர் ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை, B. A. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. காட்சிப் பொருள்கள் நம் பாடசாலை ஆசிரிய மாணவர்களாலும், மாதிரிப் பாடசாலைப் பிள்ளைகளாலுமே தயாரிக்கப்பட்டவை. ஷை பொருட்களின் வகை, தொகை, நேர்மைகளைப்பற்றித் திறப்பாளர் மிகவும் மெச்சிப்பேசினார். இதற்கேற்ப, ஷை கண்காட்சியினை இந்நகரிலுள்ள பற்பல ஆரம்பப் பாடசாலை, உயர்தரப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் திரள்திரளாக வந்து கண்டு களித்தனர். இன்னும் பலருக்கும் பயன்படுமாறு ஷை கண்காட்சி 18-ம் ஹ முதல் 22-ம் ஹ முடிய திறந்துவைக்கப்பட்டிருந்தது.

2. **மானேஜர் சுவாமியவர்களுக்கு வரவேற்பு;**—அன்று மாலை இப்பள்ளியின் மானேஜரும் தலைமையாசிரியருமாகும் சங். A. லூர்து சுவாமி, B.A., L.T. அவர்களை, ஆசிரியர்களும் ஆசிரிய மாணவர்களும், மாதிரிப்பாடசாலைப் பிள்ளைகளும் வெகு குதூகலத்துடன், நம் சபாமண்டபத்தில் வரவேற்றனர். அன்னவருக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. சிறுவர்கள் தத்தம் ஆடல்பாடல்க

லும், பெரிய மாணவர்கள் சம்பாஷணை, நடித்தல் முதலியவற்றாலும், சாரணர்கள் தங்கள் சாரணத்தொழில்களாலும் அனைவரையும் மகிழ்வித்தனர். இறுதியில் சங். மானேஜரவர்கள் பலத்த கரகோஷத்திடை எழுந்து நம் பாடசாலையின் உயரிய லக்ஷியங்களைக் கடைபிடித்தொழுகுமாறு புத்திமதி கூறி அனைவரையும் ஆசீர்வதித்தனர்.

3. **பந்தய விளையாட்டுகள்** 19-10-43 காலையில் நடைபெற்றன. நம் ஆசிரிய மாணவர்களும், பிள்ளைகளும் பற்பல போட்டிப்பந்தயங்களில் (ஓட்டம், தாண்டுதல் முதலியன) வெகு உற்சாகம் காட்டினர். சுமார் 15 முக்கிய பந்தயங்களுக்குமேல் நடைபெற்றன. பின்னர் சங். மானேஜர் சுவாமியவர்கள் ஷை பந்தயங்களில் சிறந்துவிளங்கினவர்கட்கும் முக்கியமாய் **சாம்பியன்** மெடல் பெற உரிமை பெற்ற ஆசிரிய மாணவர் **ஜோஸப் விசுவாச ராஜ்** என்பவருக்கும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

பரிசளிப்பும், நாடகமும்:—அன்று மாலை நம் திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) **ஸ்ரீ S. முருகேச முதலியார் B.A., L.T.** அவர்கள் தலைமை வகித்தனர். நம் தலைமை ஆசிரியர் **சங். லூர்து சுவாமி** அவர்கள் நம் பாடசாலையின் வருடாந்திர ரிப்போர்ட்டு வாசித்தவுடன் தலைவரவர்கள் பரிசுபெறவேண்டியவர்கட்கெல்லாம் பரிசளித்தனர். கல்வி, நடத்தை, பந்தய விளையாட்டுகள் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவர்கள் தத்தமக்குரிய பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர். பின்னர் தலைவர் கரகோஷத்திடை எழுந்து, இப் பாடசாலை ஆசிரியர்பால் புரிந்துவரும் அரிய சேவைகளைப் பாராட்டியும் தலைமையாசிரியரது அயரா உழைப்பையும் ஊக்கத்தையும்பற்றி மெச்சியும் இன்னும் இப்பாடசாலை அரசாங்கப் பரீட்சைகளில் சிறந்து விளங்கும் பான்மையைப்பற்றியும் புகழ்ந்து, தம் பேருரையை நிகழ்த்தினர்.

அடுத்தபடியாக, நம் அலங்கார நாடகமேடையின்கண் "**செஞ்சிப் புதையல்**" எனும் ஓர் இனிய நாடகம் இப்பாடசாலை ஆசிரிய மாணவர்களால் வெகுத் திறமையாக நடத்திக்காட்டப்பட்டது. அதனைக் கண்ணுற்ற நூற்றுக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் ஆனந்தித்துக் களிகூர்ந்தனர். நடிகர்களுள் சிறந்து விளங்கின "அருளானந்தம்" எனும் நம் ஆசிரிய மாணவருக்குத் தலைவரவர்களால் **வெள்ளிப்பதக்கப் பரிசு** அளிக்கப்பட்டது.

---

15. நாதநாமக்கிரியை.] [ஏகதாளம் திரிசிரகதி.

நந்தவனத்திலோராண்டி என்றமெட்டு

| கம பம கம கரி ஸஸா ,ஸநி ||
| பா. லரே பூ. கோள சேதி .ஒன்று ||

| ஸரி மம மமம கம கரி ஸரி கா ||
| பகருவேன் அவர்கள்தான் எஸ்கிமோ ஜா. தி ||

மற்ற அடிகளை இதுபோலவே பாடவும்

2. வட பாகம் தூந்திர தேசம்—கொண்ட
வட அமெரிக்காவில் செய்கிறார் வாசம்.

3. குளிர் காலம் பனிக்குகை சூழ்வார்—தோலால்
கூடாரம் கோடையில் தொடுத்ததில் வாழ்வார்.

4. அம்பு வில் கத்திக் கட்டாரி—கொண்டு
அலை மோதும் கடல்களில் படகுகள் ஏறி

5. திமிங்கலம் ஜில்வால்ரஸ் மீனும்—வேட்டை
தினமாடித்தின் பார்கள் கரிபென்ற மானும்.

6. பல வித மிருகத்தைக் கொல்லும்—நாய்கள்
பனிச் சறுக்குவண்டி இழுத்துமே செல்லும்.

7. படிப்பதற்குப் பாடசாலை இல்லை
பாலர்கள் பனிக்குன்றில் உருள்வதே வேலை.

8, வட்ட முகம் மூக்கு தட்டை—மஞ்சள்
வர்ணம் தோலாடைகள் ஆட்களும் குட்டை.

9. பச்சை மான் கறிதின் பதாலே—அவர்
பாரும் எஸ்கி மோக்கள் பெயராம் மண்மேலே.

(தொடரும்)

189982
சென்னை-600 008

விவசாயப் பழமொழிகள்

(P. Gnanadickam)

1. புழுதியில் வேர்கள் சடுதியில் இறங்கும்.
2. வித்தைப் பொறுத்தது விளைவின் திறமை.
3. மணல் வெளிதன்னில் சணலும் சவுக்கும்.
4. கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்.
5. குப்பையை மண்ணுடன் குழிகளில் குவி.
6. உழுதொழில் நிற்கின் மறுதொழில் நடவா.

Look Sharp! Ready for Sale!! Order at once!!!

E. S. L. C. VIII Std. Excellent Examiner 1944

Selling like hot cakes, Free Prize Rs. 50 will be yours, if copies purchased before the 15th Dec. 1943.

1944-ம் வருட சர்க்கார் எட்டாம் வகுப்பு பரீட்சை

விசேட வினவிடைப் புத்தகம் (விலை ரூ. 1-5-0)

Thoroughly revised and enlarged 3rd Edition (150 Pages.) with all possible and expected Questions and answers in all E. S. L. C. Public Examination Subjects—(Tamil, Arithmetic, History, Geography & Civics) 1st. and 2nd Editions were highly praised and appreciated in all higher Ely. Schools in the presidency.

1944-ம் வருட 8-ம் வகுப்பு

தமிழ்ப்பாடப் புத்தக விளக்க உரை : விலை 12 அணா.

Explanatory Notes on VIII Std. Tamil Text 1944

Concession Rates: (1) All Head-Teachers of Higher Ely. Schools can have specimen copies if they send Re. 1-12-0 in advance for both the Examiner and Tamil Annotation.

(2) One coppy will be sent free for every 6 copies purchased at one time in each set.

சிறுவர் அறிவுக்கதிர் : Children's Magazine

Estd. 1935. Annual Subscription Re. 1-8-0.

The best and most useful Magazine. Well appreciated by the public and highly recommended by the Educational authorities: Each and every Home, School, and Reading room should own a copy.

Apply to: THE MANAGER,
"SIRUVAR ARIVUKKATHIR OFFICE", *ERODE.*

N. B.—Liberal commission for bulk orders.

Reg. No. M. 1534

OUR EMPLOYMENT BUREAU

The **Bodhana Vishaya Poongothu** is being read every month by thousands of Teachers, hundreds of Teachers' Associations in addition to the numerous Pupil-Teachers in the Training Schools, throughout the Tamil-speaking Districts. This is the best medium of its kind for the advertisement of requirements of Schools. Short "Wanted" advertisements will be published on payment of Re. 1/- from Managers who are subscribers and Re. 1-8-0 from non-subscribers. The subscribing Managers shall quote their subscription numbers while placing an order at the concession rate in Our Employment Bureau.

THE EDITOR,
The Bodhana Vishaya Poongothu,
TRICHINOPOLY.

WANTED Secondary and Higher Grade Trained Teachers. Salary full Grant.

Apply to: **THE MANAGER,**
Vedavalli Thayar Elementary School,
T. Varadarajapuram,
(*Via*)—LALAPET.
MUSIRI TALUQ.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.